1973 மார்ச் 28]

இருக்கின்றன. இதில் கட்சித் தகாறு ஒன்றும் கிடையாது. அந்த அறிக்கை நமக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை இந்த அரசின் சார்பில் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இன்னும அது முடியவில்லே. விரைவில் தேதி தந்து அது பற்றி யோசிக்கின்ற நிலேமைகளே எல்லாம் அரசின் சார்பில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் அனேத்துக் கட்சித் தலேவர்கள் கூட்டத்தைக் கூட்டி ஏற்ற முடிவை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலேவரவர்களே, அண்மையில் மைசூர் மாநில முதலமைச்சர் அவாகள் விடுத்துள்ள ஸ்டேட்மெண்டை ஆட்சேபித்து மத்திய அரசாங்கத்திற்கு, குறிப்பாக பிரதம மந்திரிக்கு, ஏதாகிலும் நம்முடைய மாநில அளவில் புகார் செய்யப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலேவரவர்களே, இந்த ஸ்டேட்மெண்டைக் குறித்து நிருபர்களுக்குப் பேட்டியில் தந்த பதிலேத் தவிர புகார் எதுவும் செய்யவில்லே. சில நேரங்களில், பத்திரிக்கையில் வந்த ஸ்டேட்மெண்டுகளே, நாங்கள் இந்த எண்ணத்தில் தரவில்லே என்று வாதிடக்கூடிய சூழ்நிலே இருக்கின்ற காரணத்தால், என்ன ஸ்டேட்மெண்ட் தந்தார்கள் என்பதை அறிவதில், உண்மையைக் கண்டறிவதில் இந்த அரசு கவனமாக இருக்கிறது.

Boeing air service to Coimbatore

* 549 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have addressed the Central Government for the provision of Boeing air service to Coimbatore; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம். இந்தியன் ஏர்லேன்ஸ் நிறுவனத்துடன் இதுகுறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும், கோயம்புத்தூர் விமானதளம் போயிங் விமானப்பணி நடத்துவதற்கு ஏற்றவகையில் இல்லே என்றும் இந்தியன் ஏர்லேன்ஸ் தெரிவித்துள்ளதாகவும் ஐந்தாவது திட்டக் காலத்தில் இது ஆய்வு செய்யப்படும் என்றும் இந்திய அரசு தெரிவித்துள்ளது.